## பருத்தித்துறை பிரதேச சபை

## யாழ்ப்பாணம் மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 26 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 யூன் 29 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 ஆகஸ்ட் 30 ஆம் திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து பருத்தித்துறை பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இன் நிதிநிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையினை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தலுக்கான கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பதில் தரப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து அளித்தலுக்கான கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

#### (ஆ) கணக்கீட்டுக் குறைபாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேசசபைக்குச் சொந்தமான ரூபா 6,458,795 ஆன தலைமைக்கட்டடங்கள் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்காமையினால் சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது. | பிரதேசசபைக்கு சொந்தமான தலைமைக்கட்டட இறுதி கொடுப்பனவு கொடுக்கப்படாமையினால் கணக்கிற்கு கொண்டுவரப்படவில்லை. | தலைமைக்கட்டடத்தின் பெறுமதியினை காணி கட்டடத்தின் பெறுமதிக்குள் உள்ளடக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் கொண்டு வரப்படல் வேண்டும். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் | | | |
| | உப பிரிவு 16(2) | சபையினால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | சபையினால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை இணைக்கப்பட்டுள்ளது. | சட்டத்திற்கமைய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் இணைந்து சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதி | | | |
| | இலக்கம் 571 | காலங்கடந்த வைப்புக்களில் உள்ளடக்கப்பட்ட ஒப்பந்தகாரருக்கு மீளளிக்கப்பட வேண்டிய பிடிபணங்கள் ரூபா 246,504 தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தகாரருக்கு மீளளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. | மீளளிக்க வேண்டிய வைப்புக்கள் தொடர்பாக நிதி ஒழுங்கு விதிக்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | வடக்கு மாகாண நிதி சுற்றுநிருபம் | | | |
| | 29 திசெம்பர் 2016 இன் 30/2016 ஆம் இலக்கம் | சபையின் 05 வாகனங்களிற்கு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. | சுற்று நிருபத்திற்கமைய எரிபொருள் பரீட்சிப்பு உரியகாலத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

(ஈ) ஏனைய சுற்றறிக்கை

| | | | |
|---|---|---|---|
| 2018.07.19 ஆம் திகதிய 2018/e உள்@ராட்சி – 01 ஆம் இலக்க உள்@ராட்சி சுற்றுநிருபம் | பிரசைகளுக்கு இணையத்தின் மூலமாக சேவைகளை பெறுவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. | பதில் தரப்படவில்லை. | சுற்றறிக்கைக்கு அமைய இணையத்தள சேவைகளை பிரசைகளுக்கு உரிய காலத்தில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**1.4.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154 ஆம் பிரிவின் பிரகாரம், குறித்த சில காணிகள் விற்பனை மீது 1 % சதவீத விற்பனை வரி அறிவிடப்படவேண்டிய போதிலும், சபையினால் அவற்றினை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | சபையின் எல்லைக்குள் காணி எதுவும் ஏலத்தில் விற்பனை செய்யப்படாமையினால் வரி அறவிடுவதற்கான நடைமுறை பின்பற்றப்படவில்லை. | விற்பனைவரி அறவீடு தொடர்பாக பிரதேச சபை அதிகாரச் சட்டத்திற்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 16,211,337 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,648,918 தொகையாக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,553,000 | 1,128,452 | 1,066,048 | 1,030,139 | 56,000 | 1,711,027 | 1,701,419 | 967,734 |
| வாடகைகள் | 6,571,600 | 5,732,588 | 5,737,838 | 2,619 | 6,273,000 | 6,885,830 | 6,881,230 | 7,870 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 5,008,100 | 5,166,527 | 5,161,527 | 123,439 | 6,582,000 | 4,949,503 | 4,949,503 | 118,439 |
| ஏனைய வருமானம் | 72,301,500 | 53,737,353 | 51,799,019 | 10,082,972 | 71,094,172 | 78,923,997 | 45,358,962 | 35,452,178 |
| | 85,434,200 | 65,764,920 | 63,764,432 | 11,239,169 | 84,005,172 | 92,470,357 | 58,891,114 | 36,546,221 |

### 2.2.2 வீதவரி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் வீதவரி நிலுவை ரூபா 1,030,139 கடந்த 01 தொடக்கம் 05 வருடங்களிற்கு மேலாக அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதில் தரப்படவில்லை. | வீதவரி நிலுவைகளை அறவிட உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குத்தகை நிலுவை ரூபா 118,439 தொடர்பில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதில் தரப்படவில்லை. | குத்தகை நிலுவைகளை உரிய காலத்தினுள் அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

#### (அ) நீதிமன்ற தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,386,081 தொகையான நீதிமன்ற தண்டப்பணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | நிலுவைத் தொகையினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நீதிமன்ற தண்டப்பண நிலுவைகளை உரிய காலத்தில் அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

(ஆ) முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8,288,414 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | நிலுவைத் தொகையினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | முத்திரைக் கட்டண நிலுவைகளை உரிய காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், 30 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2019 திசெம்பர் 31 வரையிலும் 06 விடயங்களுக்கு மாத்திரம் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன | பதில் தரப்படவில்லை. | பிரதேசசபை அதிகாரச் சட்டத்திற்கு இணங்க உபவிதிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விதிக்கப்பட்ட உப விதிகளின் பிரகாரம் சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 22 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் தரப்படவில்லை. | உரிய செயற்பாடுகளிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**(இ) செயற்பாடுகளின் செயலாற்றலில் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிறைவு செய்யப்பட வேண்டிய ரூபா 20,670,000 ஆன 18 வேலைத்திட்டங்கள் உரிய காலத்தில் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய காலத்தில் நிறைவு செய்வதற்கு இனிவரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய காலத்தில் வேலைத்திட்டங்களை நிறைவு செய்வதற்கு சபையினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**(ஈ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | திண்மக்கழிவு பணிகளில் ஈடுபடுத்தப்படும் சுகாதாரத் தொழிலாளர்களுக்கு மேற்கொள்ள வேண்டிய மருத்துவ பரிசோதனைகள் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | பணியாளருக்கான மருத்துவ பரிசோதனைகள் உரிய காலத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ii) | சபையானது திண்மக்கழிவு சேகரித்தலின் போது தரம் பிரிக்கப்படாது உக்கக்கூடிய குப்பைகள், உக்க முடியாத பொருட்கள் என தரம் பிரிக்கப்படாது சேகரிக்கப்படுகின்றன | தரம் பிரித்து சேகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. | திண்மக்கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டு சேகரிக்கப்படல் வேண்டும். |

**(உ) சுற்றுச்சூழல் பிரச்சினை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொசுக்கள் நுளம்புகள் பரவுவதனை தடுப்பதற்காக கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கொசு எண்ணெய் அடிப்பது மற்றும் துர்நாற்றத்தை தடுக்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன. | சுற்றுச்சூழலை பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் சபையினால் உரியகாலத்தில் எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்டிருந்த சனசமுக நிலைய மானியங்களில் ரூபா 250,000 தொடர்பில் எதுவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரியதேவைக்கு உரிய காலத்தில் மானியங்களைப் பயன்படுத்துவதற்கு சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | உள்@ராட்சி உதவியாளரினால் தயாரிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாமையினால் பிரதேச சபைக்குரிய பணிகள் நிறைவேற்றப்படாமல் இருந்தது | பதில் தரப்படவில்லை. | உரிய காலத்தில் உரிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 13 மனித வளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | வெற்றிடங்களை உரிய காலத்தில் நிரப்புவதற்கு சபையினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சோலைவரி அறவிடுவதற்காக வருடாந்தம் சபையினால் ஆதன உரிமையாளர்களுக்கு "K" படிவம் வழங்கப்பட வேண்டும். எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் பிரதேச சபையினால் ஆதனங்களிற்கான "K" படிவம் பொதுமக்களிற்கு விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆதனவரி அறவீடு செய்வதற்கு K படிவம் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | பிரதே சபைச் சட்டத்திற்கமைய K படிவம் வழங்குவதற்கு சபையினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 09 வாகனங்களைத் திருத்தம் செய்வதற்கு பிரதேச சபையினால தேவையான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. | வாகனங்கள் திருத்தம் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.4.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபையின் பயன்பாட்டிலுள்ள 07 வாகனங்கள் பிரதேச சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிமையை மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. | சபைக்கு உரித்தான வாகனங்களின் உரிமையை மாற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.4.3 விளைவற்ற சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுற்றுலாத்துறைக்காக மணற்காடு கடற்கரையோரமாக 2016 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ரூபா 2,805,443 பெறுமதியான மலசலகூடம், உடைமாற்றல் அறை, தண்ணீர் தாங்கி, கழிவகற்றல் தொட்டி, கரையோர இருக்கை, விற்பனைக்கூடம் என்பன நாளதுவரை பயன்படுத்தப்படாதிருந்ததுடன், பராமரிக்கப்படாமலும் காணப்படுகின்றது. | அப்பகுதி மக்களால் அதனைப்பபயன்படுத்துவதற்கு ஆர்வம் காட்டாது மறைமுக எதிர்ப்பு வெளிப்படுத்துகின்றனர். | குறிப்பிட்ட கட்டடத்தினை உடனடியாக பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட சபையினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.5 பெறுகை**

**3.5.1 பெறுகைத் திட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| சேவைகளுக்காக சபையினால் பெறுகை வழிகாட்டி 4.2 இல் குறிப்பிட்டதற்கு அமைவாக ஒவ்வொரு வருடத்திற்குமான பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டமானது தயாரிக்கப்பட்டதற்கான அடிப்படை ஆவணம், முன்மொழிவுகள், உள்@ராட்சி மன்றங்களின் 4 வருட அபிவிருத்தி திட்டங்களின் முன்மொழிவுகளிலுள்ள சேவைகள் என்பன பின்பற்றப்படாது தயாரிக்கப்பட்டிருந்தது. | மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித்திட்டம் பொதுமக்களின் கோரிக்கைகள் என்பவற்றை கருத்திற்கொண்டு வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்ட வேலைகள் மற்றும் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதி மூல வேலைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. | பெறுகைகள் திட்டமானது அனுமதிக்கப்பட்ட மாதிரிக்கமைவாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.5.2 ஒப்பந்த நிர்வாகம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| பெறுகை வழிகாட்டி நெறி 2006 இன் இல 5.4.11 இன் படி ஒப்பந்த வேலை தொடர்பாக மேற்கொள்ளப்படும் பெறுமதி சேர் வரி தொடர்பான விபரங்களின் பிரதி தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் தரப்படவில்லை. | பெறுமதி சேர் வரி தொடர்பான விபரங்கள் உரிய காலத்தில் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க சபையினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| சபையின் பாதீட்டு செலவிற்கும் உண்மையான செலவுகளுக்கும் இடையே கணிசத்தன்மையான வேறுபாடு காணப்படுவதனால் இது ஒரு வினைத்திறனற்ற பாதீடாக காணப்படுகின்றது. | பதில் தரப்படவில்லை. | பாதீட்டினை சரியான முறையில் திட்டமிடுவதற்கான உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படல் வேண்டும். |